DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.192/2025

PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | சங்கரபாண்டியன் (Lw - 4) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 24.06.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், பரமத்தி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2025 முதல் 2026ம் வருடம் வரை நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன்.

கடந்த 07.04.2025ம் தேதி எனது வாய்மொழி உத்தரவுபடி தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும், தலைமை காவலர் திரு.சின்னதம்பி ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்தபோது அன்றைய தினம் காலை 09.00 மணியளவில் சேந்தமங்கலம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட கோணானுார் டு கொல்லிமலை அடிவாரம் செல்லும் வழியில் இருக்கும் வெங்கட்ராமன் என்பவரது வீட்டின் அருகே கண்காணித்தபோது சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கையில் மண்பானையுடன் நின்று கொண்டிருந்தவரை பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் ஆறுமுகம் த.பெ.கந்தசாமி என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக கள் இறக்கியதாகவும் தான் வைத்திருக்கும் மண் பானையில் கள் இருப்பதாகவும் கூறினார். பின்னர் ஆஜர் எதிரியுடன் நிலையம் வந்து நிலைய பாரா அலுவலில் இருந்த தலைமை காவலர் திரு.செல்வம் அவர்களிடம்

தலைமை காவலர் திரு,மோகன்குமார் தனியறிக்கையுடன் ஒப்படைத்தார்.

மேற்படி தனியற்றிக்கையின் பேரில் தலைமை காவல் திரு.செல்வம் சம்பவம் தொடர்பாக நிலைய குற்ற எண்.110/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து. ஒரு நகலை எனது புலன் விசாரணைக்கு வைத்தார்.

நான் வழக்கை என்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 13.15 மணிக்கு காரணம் கூறி ஆஜர் எதிரி ஆறுமுகத்தை கைது செய்தேன். பின்னர் எதிரி ஆறுமுகத்தை விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும், தலைமை காவலர் திரு.சின்னதம்பி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். ஆஜர் எதிரி ஆறுமுகம் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் பனை மரத்தில் இருந்து கள்ளை இறக்கி விற்பனை செய்து வந்ததாகவும் தான் வைத்திருந்த கள்ளை விற்பனைக்கு வைத்திருந்ததாகவும் கூறினார்.

பின்னர் ஆஜர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள மண் பானையில் இருந்த 2 லிட்டர் கள்ளை அஜர் செய்தார். அதை தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும், தலைமை காவலர் திரு.சின்னதம்பி ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். பின்னர் அந்த கள்ளை அழித்தல் மகஜர் மூலம் கீழே ஊற்றி அழித்தேன். எதிரி கள்ளை கீழே கொட்டி அழித்தபோது தலைமை காவலர் திரு.மோகன்குமார் தனது செல்போனில் புகைப்படம் எடுத்தார்.

பின்னர் 07.04.2025ம் தேதி நானும் தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும், தலைமை காவலர் திரு.சின்னதம்பி ஆகியோரும் சம்பவ இடம் சென்றோம். 15.30 மணிக்கு உதவி ஆய்வாளர் பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும், தலைமை காவலர் திரு.சின்னதம்பி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(**மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

பின்னர் தலைமை காவலர் திரு.மோகன்குமார், தலைமை காவலர் திரு.சின்னதம்பி மற்றும் தலைமை காவலர் திரு.செல்வம் ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல்

செய்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

மேற்படி சம்பவ இடமானது யாருக்கு சொந்தமான இடம் என்று விசாரணையில் தெரிந்து கொண்டோமா என்றால் வெங்கடாசலம் என்பவருக்கு சொந்தமான இடம். மேற்படி வெங்கடாசலத்தை வழக்கில் சாட்சியாக சேர்க்வில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து பணம் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவ இடத்தில் ஆஜர் எதிரியோ அல்லது வேறு நபரோ கள் இறக்குகிறார்கள் என்று தகவல் தெரிவித்தார்களா என்றால் ரோந்துக்கு செல்லும்போது எதிரி கள் விற்பனை செய்து கொண்டிருந்தார். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில் குடியிருக்கும் வெங்கடாசலம் என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சங்கதியை ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மற்ற நபர்கள் கள்ளை வாங்கி கொண்டு சென்றார்களா என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ளின் மாதிரியை கைப்பற்றப்பட்ட பொருள் கள்தானா என்று நிரூபிக்கும் பொருட்டு ஆய்விற்காக எடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரியை எங்களது காவலில் வைத்துதான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றோம் என்றால் சரிதான். மேற்படி கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ளை எங்களது முன்னிலையில் அழிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்தவழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் வழக்கு ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**